
# இலஞ்சமும் ஊழலுமற்ற வளமான இலங்கைக்காக



இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய
சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான
ஆணைக்குழுவின் வெளியீடு.
**CIABC - 2010**

U N D P

## இலஞ்சம் மற்றும் ஊழலினால் நாடு மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.





## அதற்கு எதிராக எழுந்திருப்பதற்கு உமக்கு பூரணமாக உரிமையுள்ளது.

பொதுச் சொத்துக்களைக் கட்டிக்காப்பதும், பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்தல்/வீண் விரயம் செய்தல் என்பவற்றுக்கு எதிராக செயற்படுதலும் இலங்கை குடிமக்கள் எல்லோரினதும் பொறுப்பாகும்

- அரசியலமைப்புச் சட்டம் -



இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராகச் செயற்படுவோம்.
சுபீட்சமான நாளைய தினத்தை உருவாக்குவோம்.



## இலஞ்சத்தை ஒழிப்போம்!

உங்களிடம் யாரும் இலஞ்சம் கேட்டால்

# கொடுக்க வேண்டாம்


# உடன்

இலஞ்ச ஆணைக்குழுவிற்குத் தகவல் கொடுங்கள்.



# 1954

இலஞ்சம் கேட்டல்,பெறுதல்
மற்றும் கொடுத்தல் 07 ஆண்டு
காலத்திற்கான கடுழிய சிறைத்
தண்டனைக் குரிய குற்றமாகும்.



## இலஞ்சத்தை ஒழிப்போம்!


வேறுவழியின்றி நீங்கள் இப்போது இலஞ்சம் கொடுப்பதற்கு ஆளாகியிருந்தால்

# தாமதிக்காது

**இலஞ்ச ஆணைக்குழுவிற்கு தகவல் கொடுங்கள்.**



**தகவல் கொடுப்பவர் நீங்களாயிருப்பின், சட்டம் உங்களைக் குற்றம் புரிந்தவராகக் கருதாது.**



# ஊழலைத் தடுப்போம்.


## அரச ஊழியர் ஒருவர்

- தனக்கு நன்மை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக
- வேறு ஒருவருக்கு நன்மை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக
- அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்துவதற்காக
- வேறு யாருக்கும் நட்டத்தை ஏற்படுத்துவதற்காக

தமது பதவி நிலையை / அதிகாரத்தைப் பிரயோகித்தல்

# ஊழலாகும்.

அரச ஊழியர் ஒருவரின் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் தொடர்பாக உங்களுக்கு தெரியுமெனில் **இலஞ்ச ஆணைக்குழுவிற்கு அறிவியுங்கள்.**




# வருமானத்தினால் செய்ய முடியாததைச் செய்தல்

ஆளொருவர் தனது அறியப்பட்ட வருவாயினால் பெற்றுக் கொள்ள முடியுமான அளவை விடவும் கூடுதலான சொத்துக்களைத் திரட்டுவதாயின் அல்லது செலவு செய்வதாயின்

அக்குறிப்பிட்ட நபர் அந்த சொத்துக்களைத் திரட்டுவதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்டது **இலஞ்சத்தின்** மூலமாக இருக்கலாம்.

அப்படிப்பட்டவர்கள் தொடர்பாக தகவல் தெரியுமெனில்,
அவ்வாளுக்கு அல்லது அவரின் குடும்பத்தினருக்குச் சொந்தமான நில புலங்கள், அசையும் சொத்துக்கள்,பணம்,புதிய வீடு, வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகவோ அவ் ஆள் அல்லது அவரின் குடும்பத்தினர் செய்யும் செலவுகள் சம்பந்தமாக

**இலஞ்ச ஆணைக்குழுவிற்கு அறிவியுங்கள்.**



# தகவல் கொடுப்பது எவ்வாறு?

- இலஞ்ச ஆணைக் குழு அலுவலகத்திற்கு வருகை தருவதன் மூலம்
- தபால் மூலம்
- தொலைபேசி மூலம்
- தொலை நகல் மூலம்
- மின்னஞ்சல் மூலம்

**அஞ்சல் முகவரி**

தலைவர்
இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம்,
இல. 36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.



**இலவசத் துரித தொலைபேசி இலக்கம்** (Hot Line)


**1954** (24 மணி நேர சேவை)

**வேறு தொலைபேசி இலக்கங்கள்**

0112 586 257 (24 மணி நேர சேவை)
0112 584 872
0112 586 851
0112 596 360
0112 559 923 } (ஆணைக்குழுவின் பொதுத் தொலைபேசி இலக்கம்)

**தொலை நகல் இலக்கம்**

011-259 5045



**மின்னஞ்சல் முகவரி**
ciaboc@eureka.lk
sccy@sltnet.lk


## தகவல் அறிவிக்கும் போது.....

- உங்களது பெயரில் சமர்பிக்க முடியும்.
- அநாமதேயமாக சமர்ப்பிக்கப்படும் தகவல்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

அநாமதேயமாகத் தகவல் வழங்கும் போது
பூரண விபரங்களுடன் தகவல்களை அறிவியுங்கள்
ஏனெனில் உங்களிடமிருந்து மேலதிக
விபரங்களைத் திரும்பவும்
கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியாதென்பதால்




உங்களது பெயரில் தகவல்கள் தரப்படின்
உங்களைப் பற்றிய **இரகசியம் பேணப்படும்**
என்பதால்உங்களுக்குப் பாதிப்பு ஏற்படாது.




## இலஞ்சம் என்பதில் எவை உள்ளடக்கப்படும் ?

- பணம்
- பணத்தினால் பெறுமதி மதிப்பிட முடியுமான எல்லாப் பொருட்களும்
- பணத்தினால் பெறுமதி மதிப்பிட முடியாவிடினும் வேறு நன்மைகளும் உதவிகளும்



**உதாரணம் :** பெண்களிடம் தகாத உறவை வேண்டி நிற்றல்



## *இலஞ்சக் குற்றத்தைப் புரிபவர் யாவர்?*

- இலஞ்சம் கேட்கும் / பெறும் அரச ஊழியர்கள்
- இலஞ்சம் கேட்கும் / பெறும் நீதிமன்ற ஊழியர்கள்
- அரசின் மூலம் ஏதும் அலுவல் ஒன்றை நிறைவு செய்து கொள்வதற்கு இலஞ்சம் கேட்கும் / பெறும் ஆள்
- அரச ஊழியருக்கு இலஞ்சம் வழங்கும் / இலஞ்சம் வழங்குவதற்கு ஆலோசனை தெரிவிக்கும் எவரேனும் ஆள்.

## **இலஞ்ச சட்டத்தின் கீழ் குற்றமிழைப்பவர் ஆவர்.**

### அரச ஊழியர் என்றால்

அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகண ஆளுனர்கள், மாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச அலுவலகங்களின், திணைக்களங்களின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்கள், இணக்க சபைகளின் தலைவர்கள்/உறுப்பினர்கள், நடுவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள், யூரிசபைகளின் உறுப்பினர்கள் போன்றோர் கருதப்படுவர்.




## இலஞ்சமும் ஊழலும்

- சமூக,பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான நெருக்கடிகளை ஏற்படுத்தும்.
- இலட்சக் கணக்கான மக்களை இக்கட்டான நிலைக்குத்தள்ளி பட்டினியில் வைக்கும்.
- சட்ட மற்றும் சமூக ஒருமைப் பாட்டைச் சீர் குலைக்கும்.
- மனித உரிமையை மீறும்.
- திட்டமிட்ட குற்றச் செயல்களையும் பயங்கரவாதத்தையும் ஊக்குவிக்கும்.
- சமூக அநீதியை ஏற்படுத்தும்.

## எனவே,

மிகவும் சுபீட்சமான நாளைய தினத்திற்காக
இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் எதிராக
எழுந்திருப்போம்.



# ஊழலினால்,

- நாட்டின் அபிவிருத்திக்காக செலவிடப்படும் நிதி தனிப்பட்ட மனிதனின் அபிவிருத்திக்காக செலவிடப்படுவதால் நாட்டின் அபிவிருத்தி தாமதப்படும்.
- மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு அரசுக்கு இடர்பாடுகள் ஏற்படும்.
- அரச வருவாய் இழக்கப்படுவதன் மூலம் வரி விதிக்க அரசு நிர்ப்பந்திக்கப்படுவதால் பண்டங்களின் விலை அதிகரிக்கும்.
- வெளி நாட்டு முதலீடுகளும் உதவிகளும் தடைப்படும்.
- சட்டத்தை மதிக்கும் பண்பு குறைவடைந்து நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்படும்.


**எனவே,**

எங்களது நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் நாங்கள் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராகச் செயற்படுவோம்.



**1954 ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி**
**இலஞ்ச சட்டமூலம் பாராளுமன்றத்தில்**
**சமர்ப்பிக்கப்பட்டு**
**முன்னாள் பிரதமர்**
**மேன்மை தாங்கிய சேர் ஜோன் கொத்தலாவல**
**அவர்கள்**
**நிகழ்த்திய உரையிலிருந்து.....**

“ இச்சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் இலஞ்சக் குற்றத்திற்கு உட்படும் சகல குற்றவாளிகளையும் கைது செய்வதற்கு எமக்கு அதிகாரம் கிடைக்கப்பெறும்.இந் நாட்டின் சகல பிரசைகளும் ஒத்துழைக்காத விடத்து இச் சட்டத்தை சட்டக் கோவைக்கு உட்படுத்துவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. இந் நாட்டின் பிரசைகள் பெறுப்புணர்வுடன் முன்வந்து இலஞ்சத்தையும் ஊழலையும் தடுக்கும் பொருட்டு எமக்கு ஒத்துழைக்க வேண்டும். ”





இலஞ்சத்தையும் ஊழலையும் கட்டுப்படுத்துவதற்காக உங்களது செயற்திறன் மிக்க பங்களிப்பினை நல்கி பொறுப்பை நிறைவேற்றிய சிறந்த பிரசைகளாகுங்கள்.

## இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை இயன்றவரை எளிதாக பின்வருமாறு கூறமுடியும்

1. கே: இலஞ்சம் என்றால் என்ன ?

ப: அரசாங்க சேவகர் ஒருவராலோ அல்லது அரசாங்க சேவகர் சார்பாகவோ சட்ட ரீதியற்ற முறையில் அவாநிறைவொன்றை பரிந்து கேட்டல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அரசாங்க சேவகர் ஒருவருக்கு அல்லது அவர் சார்பாக சட்ட பூர்வமற்ற முறையில் அவாநிறைவொன்றை வழங்குதல் அல்லது வழங்க எத்தனித்தல் இலஞ்சமாகக் கருதப்படும்.

2. கே: இலஞ்சம் எவ்வாறு குற்றமாக கருதப்படும்?

ப:
- ➢ அவாநிறைவொன்றைப் பரிந்து கேட்டல், பெற்றுக்கொள்தல், வழங்குதல் அல்லது வழங்க எத்தனித்தல், அரச ஊழியர் ஒருவரின் கடமையை நிறைவேற்றுவதை தூண்டுவதாகவோ அல்லது பரிசு ஒன்றாகவோ இருப்பின்,
- ➢ அரச ஊழியராக இருக்கும் ஒருவர் தனது கடமையுடன் ஏற்புடையதாகினும் இல்லையாகினும் அவாநிறைவொன்றைக் கேட்பதாகவோ அல்லது பெற்றுக் கொள்வதாகவோ இருப்பின்,
- ➢ அரச அலுவலகமொன்றுடன் தனது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொடர்புறும் நபரொருவர், தனது தேவையை நிறைவேற்றிக் கொள்ள முன்பாகவோ, பின்பாகவோ அல்லது ஒருவருட காலத்திற்குள்ளாகவோ அவ் அரச ஊழியருக்கு அவாநிறைவொன்றை கொடுத்தல் அல்லது அவ் ஊழியரினால் அவ்வாறான நபரிடமிருந்து அவாநிறைவொன்றை பரிந்து கேட்பதாக இருப்பின்,

**இலஞ்ச சட்டத்தின் கீழ் குற்றமாகும்.**

3. கே: கடமையை நிறைவேற்றிக் கொள்தல் என்பதில் உள்ளடக்கப்படுபவை எவை?

ப: கடமையொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதைத் துரிதப்படுத்துதல், தாமதப்படுத்துதல், நிறைவேற்றுவதில் தடங்கல்களை ஏற்படுத்துதல், நிறைவேற்றுவதைத் தடுத்தல், நிறைவேற்றும் போது பக்கச் சார்பாக நடந்து கொள்தல், மற்றும் இது தொடர்பில் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது தனது உத்தியோக பூர்வ பணியைச் செய்யாது விடுதல் என்பன இதில் உள்ளடக்கப்படும்.



4. கே: **சட்டத்தால் அல்லது தமது தொழில் தத்துவங்களுக்கு அமைவாக அரச ஊழியர் ஒருவரினால் பெற்றுக் கொள்ளக் கூடிய அவாநிறைவு எதுவாக இருக்கும் ? உதாரணம் தருக.**

ப: அரசாங்க மருத்துவர் ஒருவர் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தனது தொழிலை பிரத்தியோகமாக செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை.

5. கே: **இலஞ்சத்திற்கும் பரிசுக்குமிடையில் வேறுபாடுள்ளதா ? அவ்வாறெனில் அவை என்ன ?**

ப: (i) இலஞ்சத்திற்கும் பரிசுக்குமிடையில் தெளிவான வேறுபாடுள்ளது.

(ii) பரிசுகள் வழங்கப்படும் போது அல்லது பெற்றுக் கொள்ளப்படும் போது அவை பிழையாக உணரப்படுவதில்லை. இலஞ்சச் செயற்பாட்டில் குற்ற உணர்வு எப்போதும் உணர்த்திக் கொண்டே இருக்கும். இவ்வறு பிழையான குற்ற உணர்வுகள் வெளித் தெரியக் கூடிய சந்தர்ப்பங்களும் மறைந்திருக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

6. கே: **பிழையான குற்ற உணர்வுகள் மறைந்திருக்கும் சந்தர்ப்பங்கள் எவை?**

ப: உதாரணமாக அரச ஊழியர் ஒருவருக்கு ஏதாவது ஒரு வங்கியின் முகாமையாளரினால் அவ் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பொதுவான நிபந்தனைகளைவிட குறைவான நிபந்தனைகளுடன் கடன் வசதி செய்து கொடுத்தல்.

7. கே: **அரச ஊழியர் ஒருவருக்குப்பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் சட்ட ரீதியாக தடங்கல்கள் உண்டா ?**


ப: தாபன விதிக் கோவையின் பிரகாரம் அரச ஊழியர் ஒருவருக்கு உறவினர்கள் நண்பர்களிடமிருந்து தனிப்பட்ட பணிகள் தொடர்பில் கிடைக்கும் சாதாரண பரிசுப் பொருட்களைத் தவிர வேறு எந்த பரிசுப் பொருட்களையும் பெற்றுக் கொள்ள முடியாது.

8. கே: **ஊழல் என்றால் என்ன ?**

ப: சுருக்கமாக கூறுவதெனில் அரச ஊழியர் ஒருவர் தனிப்பட்ட இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தனது பதவியைப் பயன்படுத்துதல் ஊழல் எனப்படும்.

9. கே: **ஊழல் குற்றத்தைச் செய்வதற்காக அத்தவறைப் புரிபவர் தனிப்பட்ட இலாபத்தைப் பெறுவது மிகவும் அவசியமா ?**

ப: இல்லை, அரச ஊழியரின் ஏதேனும் ஒரு செயற்பாட்டினால் அரசாங்கமோ அல்லது வேறு யாருமோ தனிப்பட்ட நன்மையைப் பெறும் நோக்குடன் நட்டத்தை ஏற்படுத்துதல் ஊழலாகக் கருதப்படும். அவ்வாறே அரச ஊழியர் ஒருவரோ, வேறு ஒருவரோ சட்ட விரோதமாகவோ அல்லது தனிப்பட்ட இலாபம் கருதியோ நலன் எதனையும் பெற்றுக் கொள்தலும் ஊழல் குற்றமாக கருதப்படும்.



10. கே: **இலஞ்ச சட்டத்தின் கீழ் குற்றமிழைப்பவர் யாவர்?**

ப:

- அரச ஊழியர் ஒருவரினால் தனது அல்லது வேறு அரச ஊழியர் ஒருவரின் அலுவலகத் தத்துவங்கள் சம்பந்தமாக அவாநிறைவொன்றை பரிந்து கேட்கும் போது அல்லது பெற்றுக் கொள்ளும் போது அவ் அரச ஊழியரால்
- அரச ஊழியர் ஒருவரின் மூலம் உத்தியோகப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இடையில் சம்பந்தப்படும் இடைத்தரகர் ஒருவர் மூலம் அவா நிறைவொன்றை பரிந்து கேட்கும் போது அல்லது பெற்றுக் கொள்ளும் போது அவ் இடைத்தரகரால்
- அரச ஊழியர் ஒருவரின் உத்தியோகப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவ் அரச ஊழியருக்கு அல்லது வேறு அரச ஊழியர் ஒருவருக்கு அல்லது இடையில் சம்பந்தப்படும் இடைத்தரகர் ஒருவருக்கு இலஞ்சமொன்றைக் கொடுக்கும் போது அவ்வாறு கொடுப்பவரால்
- மேற் குறிப்பிட்ட தவறுகளை இழைப்பதற்கு எத்தனிக்கின்ற, உதவி புரிகின்ற அல்லது சூழ்ச்சி செய்கின்ற நபரினால்

11. கே: **இலஞ்ச சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படுபவை எவை?**

ப: இலஞ்ச சட்டத்தின் கீழ் பின்வருவன குற்றமாக கருதப்படும்

- நீதித்துறை அலுவலர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான இலஞ்சம்
- எவரேனும் ஆளொருவர் சார்பாக அரச ஊழியர் ஒருவரை செவ்வி காண்பதற்காக பாராளுமன்ற உறுப்பினரால் பெற்றுக் கொள்ளப்படும் அவா நிறைவு
- காவல்துறை அதிகாரிகள், சமாதான உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்கள் (அலுவலகத் தத்துவங்களுக்கு அமைய) தொடர்பான இலஞ்சம்
- அரசுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் உதவியளிப்பதற்காக அல்லது செல்வாக்கைப் பிரயோகிப்பது தொடர்பிலான இலஞ்சம்
- அரசின் செயற்பாடுகள் தொடர்பிலான இலஞ்சம்



- அரசின் கோரிக்கைகள், கொடுப்பனவுகள், நியமிப்புகள் மற்றும் அரச சேவையில் ஈடுபடுத்துதல், ஏதேனும் மானிய அன்பளிப்பு, குத்தகை மற்றும் வேறு நன்மைகள் தொடர்பிலான இலஞ்சம்
- அரசுடனான கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் நபரொருவர் அவர் தொடர்புறும் அரச நிறுவனத்தின் ஊழியர்களுக்கு கொடுக்கும் அவா நிறைவு
- உள்ளூராட்சி நிறுவனங்களின் அல்லது இலஞ்ச சட்டத்தின் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நிறுவனமொன்றின் நிருவாக சபை உறுப்பினர் அல்லது ஊழியர்கள் தொடர்பிலான இலஞ்சம்
- உள்ளூராட்சி நிறுவனமொன்றின் உறுப்பினரொருவரின் அல்லது இலஞ்ச சட்டத்தின் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நிறுவனமொன்றின் நிருவாக சபை உறுப்பினரொருவரின் வாக்கைப் பெற்றுக் கொள்வதற்காக, செல்வாக்கைப் பிரயோகிப்பது, அச்சுறுத்துவது, மோசடி செய்வது அல்லது மற்றும் சட்ட விரோதமான முறையில் தமது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு எத்தனிப்பது
- இலஞ்சத்தின் மூலம் பெற்றுக் கொண்டதாக கருதப்படும் ஆதனங்கள்
- ஊழல்

12. கே: **இடைத்தரகர் ஒருவர் மூலம் அவா நிறைவொன்றைப் பெற்றுக் கொண்டு சட்டத்திலிருந்து தப்ப முடியுமா?**

ப: முடியாது.

ஆளொருவரின் அறிவு அல்லது சம்மதத்துடன் அக்குறிப்பிட்ட ஆள் அல்லது வேறு ஒருவரால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலஞ்ச குற்றமொன்று மேற் கொள்ளப்பட்டால் அக் குற்றத்தைக் குறிப்பிட்ட முதலாம் ஆள் செய்ததாகவே சட்டத்தால் கருதப்படும்.

13. கே: **இலஞ்சம் அல்லது ஊழல் பற்றி தெளிவான சாட்சியங்கள் இல்லாது போகும் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட குற்றம் புரிந்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா?**

ப: முடியும்.

14. கே: **அது எவ்வாறு ?**

ப: ஆதனச் சட்டத்தின் கீழ்.

15. கே: **ஆதனச் சட்டம் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது?**



ப: ஆளொருவர் 1954 மார்ச் 1 ஆம் திகதி யன்றோ அதன் பின்னராகவோ தனதாக்கிக் கொண்ட பணம், பணமல்லாத ஆதனங்கள் அந் நபரின் அறியப்பட்ட வருவாயின் அல்லது வரவுகளின் பகுதியாக இருக்க முடியாத விடத்து அப்பணம்

அல்லது பணமல்லாத அவ் ஆதனங்கள் இலஞ்சத்தின் மூலம் பெற்றுக் கொண்டதாக ( அவை அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படவில்லை என குறித்த நபரினால் நிரூபிக்கப்படும் வரையில்) சட்டத்தால் கருதப்படும்.

16. கே: **ஆதனங்களை மனைவியின் பெயரில் அல்லது பிள்ளைகளின் பெயரில் திரட்டுவதன் மூலம் சட்டத்திலிருந்து தப்பமுடியுமா?**

ப: முடியாது.

ஆளொருவரின் மனைவி அல்லது 18 வயதிற்கு மேற்படாத திருமணமாகாத பிள்ளைகளின் பெயரில் திரட்டப்பட்ட பணம் அல்லது பணமல்லாத ஆதனங்கள் (முரணான கருத்து நிரூபிக்கப்படும் வரையில்) அந்த நபரினால் திரட்டப்பட்ட ஆதனங்களாகவே சட்டத்தால் கருதப்படும்.

17. கே: **ஆதனச் சட்டம் அரச ஊழியர்களை மட்டும் ஆளுகைக்கு உட்படுத்துமா?**

ப: இல்லை.

ஆளொருவர் 1954 மார்ச் 1 ஆம் திகதியன்றோ அதன் பின்னராகவோ திரட்டிக்கொண்ட ஆதனங்கள் தொடர்பில் குறிப்பிட்ட நபர் மீது இச்சட்டம் ஆதிக்கத்தைச் செலுத்தும். அந்நபர் அரச ஊழியரா இல்லையா என்பதோ அந்நபர் அரசுடன் தொடர்புண்டா இல்லையா என்பதோ ஏற்புடையதல்ல.

18. கே: **அவாநிறைவொன்றைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல அவாநிறைவொன்றைக் கொடுப்பதும் குற்றமெனில் அறியாமல் அல்லது தவிர்க்க முடியாத காரணத்தினால் இலஞ்சம் கொடுத்துவிட்டு முறைப்பாடு செய்வதன் மூலம் முறைப்பாட்டாளருக்குத் தண்டனை கிடைக்குமா?**

ப: இலஞ்ச சட்டத்தின் கீழ் இலஞ்சம் வாங்குவதைப் போலவே இலஞ்சம் கொடுப்பதும் சமனான தண்டனைக்குறிய குற்றங்களாகும். ஏன்றாலும் இலஞ்சம் வழங்கிய நபர் முறைப்பாட்டாளராகும் சந்தர்ப்பங்களில் சட்டம் குறித்த நபரை குற்றவாளியாக அல்ல இலஞ்சம் கேட்ட நபரின் சூழ்ச்சியில் சிக்கிய அப்பாவியாகவே கருதும். எவ்வாறெனினும் ஒருவர் இலஞ்சம் கேட்கும் போது அதைக் கொடுப்பதற்கு முன்பாக இலஞ்ச ஆணைக் குழுவிற்கு முறைப்பாடு செய்தல் சாலச் சிறந்த செயற்பாடாகும்.

19. கே: **இலஞ்சமாக பரிமாறிக்கொள்ளப்படக் கூடியவை பணம் அல்லது பணத்தினால் மதிப்பிடக் கூடிய ஆதனங்கள் மட்டுமா?**

ப: இல்லை. அவாநிறைவொன்றிற்காக பணம் அல்லது பணத்தினால் மதிப்பிட முடியாத ஆதனங்களும் பரிமாறிக்கொள்ளப்படலாம்.



20. கே: **அதைத் தெளிவுபடுத்தவும்?**

ப: அவாநிறைவொன்றைப் பரிமாறிக்கொள்ளச் சாத்தியமானவைகள் பற்றி இலஞ்ச சட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இலஞ்ச சட்டத்திற்கு அமைவாக அவாநிறைவொன்று பின்வருமாறு அமையலாம்.

a) கடன், கட்டணம் அல்லது பணிக் கொடையொன்றைப் பெறுவதாக

b) ஏதும் தொழில் அல்லது பதவியொன்றைப் பெற்றுக்கொள்வதாக.

c) ஏதும் கடன் அல்லது பிணையிலிருந்து விடுவிப்பதாக.

d) வழக்குத் தொடர்வதிலிருந்து அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையிலிருந்து தப்பித்துக்கொள்வதாக

e) ஏதும் உரிமையை அல்லது உத்தியோக பூர்வ அதிகாரத்தைச் செயற்படுத்துவது அல்லது அதிலிருந்து விலகியிருப்பதாக.

f) ஏதும் ஒருவகைகுள் அடங்கும் பிற சேவைகள் உதவிகள் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதாகவும் இருக்கலாம்

21. கே: **ஏதும் ஒருவகைகுள் அடங்கும் பிற சேவைகள் உதவிகள் நன்மைகள் என்பவற்றில் உள்ளடக்கப்படுபவை எவை?**

ப: a) பாலியல் ரீதியில் திருப்தியைப் பெற்றுகொள்வதனூடாக உடல்ரீதியில் பெற்றுக் கொள்ளும் சேவை இலஞ்சமாகக் கருதப்படும்

b) பிள்ளையொன்றைப் பிரசித்திபெற்ற பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்காகப் பெற்றுக் கொள்ளும் உதவி இலஞ்சமாகக் கருதப்படும்

c) வெளி நாட்டுப் புலமைப் பரிசில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உளரீதியாகப் பெறப்படும் நன்மை இலஞ்சமாகக் கருதப்படும்

22. கே: **இலஞ்ச சட்டத்தின் கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாவதால் ஒருவருக்கு வழங்கப்படும் தண்டனை யாது?**

ப: 1. இலஞ்சத்தைப் பரிந்து கேட்டல், ஏற்றுக் கொள்ளுதல்,கொடுத்தல் அல்லது இதில் ஏதும் ஒன்றைச் செய்வதற்கு எத்தனிக்கும் போது, சூழ்ச்சி செய்யும் போது அல்லது அனுசரணை வழங்கும் போது

a) 7 ஆண்டுகளை விஞ்சாத கடூழிய சிறைத் தண்டனை. அல்லது ரூபா 5000 இற்கு மேற்படாத தொகையை தண்டப் பணமாக விதித்தல் அல்லது இவை இரண்டும்.



b) மேற்குறிப்பிட்ட தண்டனைகளுக்கு மேலதிகமாக இலஞ்சத்திற்காக பரிமாற்றஞ் செய்யப்பட்ட இலஞ்சத்தின் பெறுமதிக்கு சமமான தொகையை தண்டப் பணமாக அறவிடல்.

2. ஏதும் ஆதனமொன்று இலஞ்சத்தின் மூலம் பெற்றுக் கொண்டதாக நிரூபிக்கப்படும் போது மேற்குறிப்பிட்ட 1 (a) தண்டனைக்கு மேலதிகமாக ஆதனத்தின் பெறுமதிக்குக் குறையாத அததோடு ஆதனத்தின் மும்மடங்கை விஞ்சாத தொகையை தண்டப் பணமாக நியமித்தல் அல்லது குறிப்பிட்ட ஆதனத்தை அரசுடைமையாக்குதல்.

3. ஊழல் குற்றச் சாட்டொன்றில் குற்றவாளியாக்கப்படின் 10 வருடத்திற்குக் குறையாத காலத்திற்குச் சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தண்டப்பணம் அல்லது மேற்கூறிய இரண்டும்.

23. கே: மேற்குறிப்பிட்ட தண்டனைக்கு மேலதிகமாக பிற இயலாமைகளுக்கு அடிபணிய நேரிடுமாயின் அவை என்ன ?

ப: a) தனது பதவியை அல்லது தொழிலை இழத்தல் இத்தோடு ஓய்வூதியம், பணிக்கொடைக்கான உரித்தும் இரத்துச் செய்யப்படும்.

b) பாராளுமன்றத் தேர்தல் எனின் 7 ஆண்டுகளுக்கும் உள்ளூராட்சித் தேர்தல் எனின் 5 ஆண்டுகளுக்கும் வாக்காளராக பதிவு செய்வதற்கு, வாக்களிப்பதற்கு அல்லது தெரிவு செய்யப்படுவதற்கு தகமை அற்றிருத்தல்

c) அரசின் அல்லது இலஞ்ச சட்டத்தின் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களில் தொழில் ஒன்றை அல்லது பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை முற்று முழுதாக இழத்தல்.

24. கே: இலங்கைக்கு வெளியில் அரச ஊழியர் ஒருவரினால் இலஞ்சம் கேட்பதும் பெறுவதும் குற்றமா ?

ப: ஆம், அக் குற்றமானது இலங்கை தாய் நாட்டினுள் செய்த குற்றமாகக் கருதப்பட்டு வழக்குத் தொடர முடியும்.

25. கே: இலஞ்ச சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்கொன்றில் சாட்சி கூறுவதற்காக முன்வருபவர்களைப் பாதுகாப்பதற்காக இலஞ்ச சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் உள்ளதா?

ப: ஆம், இலஞ்ச குற்றமொன்று சம்பந்தமாக சாட்சியளிப்பதற்கு முன்வரும் சாட்சிகளுக்கு அவ்வாறு சாட்சியமளிக்காது இருப்பதை ஊக்குவித்தல், இடையூறு விலைவித்தல், அதிகாரத்தைப் பிரயோகித்துத் தடுத்தல் மற்றும் சாட்சிகளின் நற் பெயரிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துதல் அல்லது உடலுக்கு ஊறு விளைவித்தல் என்பதற்குஎதிரக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு நடவடிக்கை மேற் கொள்ள முடியும்.



# இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்காகவும் சொத்துக்களையும் பெறுப்புக்களையும் வெளிப்படுத்தும் சட்டத்தின் மூலம் வெளிப்படும் குற்றங்களுக்கு வழக்குத் தொடர்வதற்காகவும் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுவே இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவாகும்.

இவ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதோடு 1958 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்த இலஞ்ச ஆணையாளர் திணைக்களமும் இலஞ்ச ஆணையாளர் பதவியும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற அல்லது மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவரினாலும் குற்றப்புலனாய்வுடன் சட்ட வலுவூட்டல் சம்பந்தமாக பரந்த அனுபவமுள்ள ஒருவரினாலும் இவ் ஆணைக்குழு பிரதிநிதித்துவப்படுத்தப்படும்.

ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெறும் தொடர்பாடல்கள் ஆணைக்குழு உத்தியோகத்தர்களால் புலனாய்வு செய்யப்பட்டதன் பின்பு குற்றமிழைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுமானால் குறிப்பிட்ட நபருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு பணிப்பாளர் தலைமை அதிபதி ஆணைக்குழுவால் பணிக்கப்படுவார். ஆவ்வாறு தொடரப்படும் வழக்குகள் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர்களினால் நெறிப்படுத்தப்படும்.



(சகல தகவல்களினதும் இரகசியம் பேணப்படும்)

# இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு

த.பெ.இலக்கம் 1431, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு -07

தொலை பேசி இலக்கம் 1954, 2559923, 2596360 தொலை நகல் 2595045 மின்னஞ்சல் ciaboc @eureka.lk

## தகவல் பத்திரம்

அவசியம் : உங்களால் தகவல்கள் வழங்கப்படுவது

அ) ஊழல் செயற்பாடு சம்பந்தமாக எனின் ☐ படிவ இலக்கம் (அ) வைப் பாவியுங்கள்.

(ஆ) இலஞ்சச் செயற்பாடு சம்பந்தமாக எனின் ☐ படிவ இலக்கம் (ஆ) வைப் பாவியுங்கள்

(இ) சொத்துக்கள் சம்பந்தமாக எனின் ☐ படிவ இலக்கம் (இ) யைப் பாவியுங்கள்

(ஈ) வேறு செயற்பாடுகள் சம்பந்தமாக எனின் ☐ படிவ இலக்கம் (ஈ) யைப் பாவியுங்கள்

நீங்கள் தகவல்கள் வழங்குவது பெயரிடப்பட்டு ☐ அநாமதேயமாக ☐

(பெயரிடப்பட்டு ஒப்பமிட்டால் மட்டும் வினா இல. 01.இற்கும் 02.இற்கும் தகவல் வழங்கவும்)

அவசியம் : இலஞ்சச் செயற்பாடு சம்பந்தமாக எனின் உங்களது தகவல்கள் தரப்படுவது முக்கியமாகும்.

திகதி : ☐

01. உங்களது முழுப்பெயர்:...............................................................................................

02.. உங்களைத் தொடர்பு கொள்ள முடியுமான வழிகள்

முகவரி : ...............................................................................................

...............................................................................................

தொலை பேசி இலக்கம் ☐

மின்னஞ்சல் முகவரி ☐

---

(அ படிவம்)

## ஊழல் செயற்பாடுகள் சம்பந்தமானது.

03. குறிப்பிட்ட நிகழ்வு பற்றி சுருக்கமாக ...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

...............................................................................................

04. குறிப்பிட்ட விடயம் நடைபெற்ற திகதி அல்லது கால எல்லை. ☐

05. இது குறித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தரப்பினர்

| | தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தரப்பினர் | முகவரி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |

06. மேற் குறிப்பிட்ட தகவல்கள் / நிகழ்வுகள் பற்றி உங்களால் இவ் ஆணைக் குழுவிற்கு அல்லது வேறு நிறுவனங்களுக்கு இதற்கு முன்பு தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளதா ?ஆம் ☐ இல்லை ☐ ஆமெனின் அந் நிறுவனங்கள் எவை?

| | நிறுவனங்கள் | திகதி | பதிலளிக்கப்பட்டுள்ளதா |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |
| 03. | | | |

07. இவ் ஆணைக் குழுவிற்கு தகவல் முன்வைக்கப்பட்டிருப்பின் கோப்பு இலக்கம் : ☐

08. ஒப்பம்...............................

(ஆ படிவம்)

## இலஞ்சம் கேட்பது அல்லது பெறுவது சம்பந்தமானது.

03. குறிப்பிட்ட நிகழ்வு பற்றி சுருக்கமாக ..........................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

04. குறிப்பிட்ட நிகழ்வு நடைபெற்ற நாள்.

05. இடம் :

06. இலஞ்சம் கேட்ட / கொடுத்தவரின் பெயர் :

07. அவர் அரச ஊழியர் எனில்

அவரின் பெயர் :

அவர் பணி புரியும் அரச நிறுவனத்தின் பெயர் :

08. பெற்றுக் கொண்ட இலஞ்சத்தின் தன்மை: பணம்    அளவு

பண்டங்கள்    பண்டங்கள் சம்பந்தமான விபரம்

09. குறிப்பிட்ட நிகழ்வை உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்களை முன்வைக்க முடியுமெனில் அவர்களின

| பெயர் | முகவரி | தொலை பேசி எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

10. இந் நிகழ்வை உறுதிப்படுத்த முன்வைக்க முடியுமான ஆவணங்கள்.

| | | | |
|---|---|---|---|
| i | | iii | |
| ii | | iv | |

11. மேற் குறிப்பிட்ட ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன / இணைக்கப்படவில்லை.

12. ஒப்பம்.........................

(இ படிவம்)

# சொத்துக்கள் சம்பந்தமானது.

03. சொத்துக்களைத் திரட்டியுள்ளவர்களின் விபரம்

பெயர் :

பதவி :

தொழில் புரியும் நிறுவனம்

04. சுவீகரித்துக் கொண்ட சொத்துக்களின் தன்மை

(*)அசையும் சொத்துக்கள் எனின் அவற்றின் விபரம்: ....................................................

(*) அசையா சொத்துக்கள் எனின்

| அவற்றின் தன்மை | விபரம் / அமைந்துள்ள இடம் |
|---|---|
| i. ........................ | ........................ |
| ii. ........................ | ........................ |
| iii. ........................ | ........................ |
| iv. ........................ | ........................ |
| v. ........................ | ........................ |
| vi. ........................ | ........................ |

05. தகவல்களை உறுதிப்படுத்தக் கூடியவர்களிருப்பின் அவர்களின் விபரம்

| | பெயர் | முகவரி | தொலை பேசி எண் |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

06. தகவல்களை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களிருப்பின் அவற்றின் விபரம்

| | ஆவணங்கள் | திகதி | பிரதி இத்துடன் |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

07. மேற் குறிப்பிட்ட தகவல்கள் / நிகழ்வுகள் பற்றி உங்களால் இவ் ஆணைக் குழுவிற்கு அல்லது வேறு நிறுவனங்களுக்கு இதற்கு முன்பு தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளதா ? ஆம் இல்லை

ஆமெனின் அந் நிறுவனங்கள் எவை?

| | நிறுவனங்கள் | திகதி | பதிலளிக்கப்பட்டுள்ளதா |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

08. இவ் ஆணைக் குழுவிற்கு தகவல் முன்வைக்கப்பட்டிருப்பின் கோப்பு இலக்கம் :

09. ஒப்பம்..........................

(ஈ படிவம்)

# வேறு தகவல்கள் சம்பந்தமானது

முக்கியமானது : உங்களால் வழங்கப்படும் தகவல்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் பலனாய்வு செய்யும் ஆணைக்குழுச் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

03. குறிப்பிட்ட நிகழ்வு பற்றி சுருக்கமாக ..................................................

04. குறிப்பிட்ட விடயம் நடைபெற்ற திகதி அல்லது கால எல்லை.

05. இது குறித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தரப்பினர்

| | தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தரப்பினர் | முகவரி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

06. மேற் குறிப்பிட்ட தகவல்கள் / நிகழ்வுகள் பற்றி உங்களால் இவ் ஆணைக் குழுவிற்கு அல்லது வேறு நிறுவனங்களுக்கு இதற்கு முன்பு தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளதா ? ஆம் இல்லை


ஆமெனின் அந் நிறுவனங்கள் எவை?

| | நிறுவனங்கள் | திகதி | புதிலளிக்கப்பட்டுள்ளதா |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

07. இவ் ஆணைக் குழுவிற்கு தகவல் முன்வைக்கப்பட்டிருப்பின் கோப்பு இலக்கம் :

08. ஒப்பம்.........................................................

# இலஞ்சம் மற்றும் ஊழலினால் நாடு மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.




## அதற்கு எதிராக எழுந்திருப்பதற்கு உமக்கு பூரணமாக உரிமையுள்ளது.




# நாளைய தினம் திரும்பவும் தலை தூக்காத வணணம் இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்போம்.

இலஞ்சத்தையும் ஊழலையும் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளுக்கு மக்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் அமையத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் உதவியுடன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக இக்கை ஏடு பிரசுரிக்கப்பட்டது.